**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII, Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 31 of 2024

Depositions of PW -1 witness for ________ Prosecution / Defence / Court

Name : பாலசுப்ரமணியம்

Father's Name : தங்கமுத்து

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th **day of November** 2025.

(**2**ம் எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். **1**ம், **3**ம் எதிரிகள் ஆஜர். **எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்**)

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் கோவை மாவட்டம், சூலூர் தாலுகா, ஜல்லிபட்டியில் குடியிருந்து கொண்டு.நான் கடந்த 07.07.2023 ஆம் தேதி செஞ்சேரி பிரிவு, பூராண்டாம்பாளையம் டாஸ்மாக் மதுக்கடை எண்.22 67ல் சூப்பர்வைசராக பணி செய்த பொழுது வழக்கம்போல் இரவு 10.00 மணிக்கு கடையினை மூடிவிட்டு சேல்ஸ்மேன் வீரன் அவர்கள் சென்றுள்ளார். 08.07.2023 ஆம் தேதி சுமார் 06.30 மணி அளவில் கட்டிட உரிமையாளர் சிதம்பரம் எனக்கு போன் செய்து கடையின் பூட்டு உடைக்கப்பட்டு இருப்பதாக தகவல் சொன்னார். நான் உடனடியாக சேல்ஸ்மேன் வீரன் என்பவருக்கும் பொள்ளாச்சி டாஸ்மாக் மாவட்ட மேலாளர் நடேசன் அவர்களுக்கும் தொலைபேசி மூலமாக தகவல் தந்து கடைக்கு வந்து பார்க்கும் பொழுது கடையின் முன்பக்க சட்டரில் இருந்த இரண்டு பூட்டுகள் உடைக்கப்பட்டு சட்டர் பாதி திறந்த நிலையில் இருந்தது.

2. போலீசார் தகவல் தெரிவித்து போலீசார் சம்பவ இடம் வந்தார்கள் வந்து பார்வையிட்ட பொழுது 1848 BRANDY 1no, Signout Brandy 2 Nos, Kinglousis Brandy 2 Nos, Konigue

**Fusion Brandy** 7 nos, **Clovis Brandy** 2 **Nos**, **SNJ** 1000 **Beer** 2 **nos** மொத்தம் 16 பாட்டில்கள் காணவில்லை. பின்னர் மாவட்ட மேலாளரும் கடைக்கு நேரில் வந்துவிட்டார். அவர்களிடம் கலந்து ஆலோசித்து அன்றைய தினமே புகார் அளித்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். புகார் **அ.சா.ஆ.1** ஆக செய்யப்படுகிறது. பின்னர் இரண்டு மாதங்கள் கழித்து ஒன்பதாவது மாதம் காவல் நிலையம் அழைத்து நான் 16 பாட்டில்களையும் காவல் நிலையத்தில் அடையாளம் காண்பித்தேன். அப்பொழுது எதிரிகளும் அங்கு இருந்தார்கள். 16 பாட்டிகள் உள்ள புகைப்படங்கள் முறையே **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**1 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. எங்கள் கடை செஞ்சேரி பிரிவு பூரண்டாம்பாளையத்தில் காட்டுப்பகுதியில் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனக்கு திருட்டு சம்பவம் குறித்து யார் முதலில் தகவல் சொன்னார்கள் என்றால் கடையின் உரிமையாளர் சிதம்பரம் அவர்கள் எனக்கு தகவல் சொன்னார். அவருடைய வீடு கடையிலிருந்து சுமார் 100 அடி தூரத்தில் உள்ளது. டாஸ்மாக் கடை காலை 12.00 மணிக்கு திறந்து இரவு 10.00 மணிக்கு மூடப்படும். சம்பவ காலத்தில் டாஸ்மாக்கில் எத்தனை பணியாட்கள் பணி செய்தார்கள் என்றால் மூன்று பணியாட்கள் பணி செய்தார்கள். எனக்கு இடத்தின் உரிமையாளர் தகவல் சொன்னவுடன் மேற்படி விபரத்தை நானும் மாவட்ட மேலாளர் அவளர்களுக்கு தகவல் சொன்னேன் என்றால் சரிதான். மாவட்ட மேலாளர் வராமல் நான் கடைக்குள் செல்ல இயலாது என்றால் சரிதான். மாவட்ட மேலாளர் சம்பவ இடத்திற்கு எப்பொழுது வந்தார் என்றால் சுமார் பத்து முப்பது மணி அளவில் காலையில் வந்தார்.

2. சம்பவம் குறித்து எனக்கு தகவல் எப்பொழுது கிடைத்தது என்றால் காலை 06.30 மணி அளவில் தகவல் கிடைத்தது. மேலாளர் வந்ததும் என்ன செய்தோம் என்றால் இருப்பு பதிவுகளை பார்வையிட்டதில் 16 பாட்டில்கள் குறைவு இருப்பதை தெரிந்து கொண்டோம். பொதுவாக டாஸ்மாக்கில் விற்பனைக்காக பாட்டில்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். காணாமல் போனதாக சொல்லப்படும் பாட்டில்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பாட்டில்களில் இருந்து எடுக்கப்பட்டதா அல்லது அட்டைப்பெட்டிக்குள் இருந்து எடுக்கப்பட்டதா என்றால் அடிக்கி வைக்கப்பட்டிருந்த பாட்டில்கள்தான் காணாமல் போயிருந்தது. அன்றைய தினம் எவ்வளவு இருப்பு இருந்தது, எவ்வளவு தொகை டாஸ்மாக்கில் இருந்தது, மேலும் அன்றைய தினம் எத்தனை பாட்டில்கள் விற்பனை செய்யப்பட்டது என்பதற்கான இருப்பு பதிவேடு விற்பனை ஆவணம் ஏதேனும் வழக்கு விசாரணையின் பொழுது போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. மேலும் திருடு போனதாக சொல்லப்படும் 16 பாட்டில்கள் தவிர்த்து எவ்வளவு பாட்டில்கள் இருப்பு இருந்தது என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் போலீசார் விசாரணையின் பொழுது கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை.

3. சம்பவ சமயத்தில் CCTV கேமராக்கள் பொருத்தப்பட்டு இருந்ததா என்றால் பொருத்தப்பட்டிருந்தது, ஆனால் செயல்பட்டில் இல்லை. சிசிடிவி கேமராக்கள் செயல்படுகிறதா என்பதை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு எனக்கு உண்டு என்றால் சரிதான். நான் சிசிடிவி கேமராக்கள் சமர்ப்பித்தால் திருடு போகவில்லை என்ற விபரம் தெரிந்துவிடும் என்பதால் தான் சம்பவ காலத்தில் CCTV கேமரா வேலை செய்யவில்லை என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் குறித்து சிதம்பரம் காலை 6:30 மணிக்கு எனக்கு தகவல் சொன்னவுடன் நான் மேற்படி விபரத்தை போலீசாருக்கு சொன்னேன் என்றால் சரிதான். என்னுடைய உயர் அதிகாரிகள் அனுமதி இல்லாமல் சம்பவம் குறித்து நான் போலீசாருக்கு தகவல் சொன்னேன் என்றால் சரிதான். போலீசாரிடம் நான் தகவல் சொன்னவுடன் சம்பவ இடம் வந்து விட்டார்கள் என்றால் சரிதான்.

4. நான் தகவல் சொன்னதாக சொல்லப்படும் போலீசின் பெயர் எனக்கு தெரியாது. சம்பவத்தை பார்த்தவுடன் புகார் கொடுத்தேன், நேரம் சரியாக ஞாபகம் இல்லை. புகார் அளிக்க என்னுடன் யார் உடன் வந்தார்கள் என்றால் விற்பனையாளர் வீரன் என்பவரும் வந்தார். புகாரை நான் எழுதி காவல் நிலையம் சென்றேனோ அல்லது புகாரை காவல் நிலையத்தில் வைத்து எழுதினேனா என்றால் பாட்டில் இருப்பு குறைவு பற்றிய விபரங்கள் எழுதிக் கொண்டு சென்றேன். ஆனால் புகார் எங்கு வைத்து எழுதினேன் என தற்பொழுது எனக்கு ஞாபகம் இல்லை. எங்கள் கடையின் அகலம் மற்றும் நீளம் எவ்வளவு என்றால் 22*16 அடி. எங்கள் கடையில் வாடிக்கையாளர்கள் கடை திறந்திருக்கும் பொழுது அதிக அளவில் வந்து செல்வது வழக்கம் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் அடையாளம் தெரியாத நபர் என குறிப்பிட்டு புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

5. நான் புகார் கொடுத்து சுமார் இரண்டு மாதங்கள் கழித்து காவல் நிலையம் வரவழைத்து போலீசார் காவல் நிலையத்தில் எதிரே காண்பித்த பின்பு தான் இவர்கள்தான் எடுத்துள்ளதாக போலீசார் சொல்லி தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க புள்ளி விபரத்திற்காக பொய்யான வழக்கு கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.நான் கொடுத்த புகாரிலேயே மேலாளர் வந்து கலந்து ஆலோசித்து புகார் கொடுத்ததாக சொல்லி உள்ள நிலையில் மேலாளர் வருவதற்கு முன்பாகவே புகார் கொடுத்து விட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றும், நான் சொன்னது போல் எந்த வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

<u>**இரண்டாம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. Adopted cross examination of A1 and A3. நான் பணியில் சேர்ந்த காலத்தில் இருந்து சூப்பர்வைசராக தான் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். ஒவ்வொரு மது பாட்டில்கள்

விற்பனை செய்யப்படும் பொழுதும் பில் தரவேண்டும் என்றால் சரிதான். Stock register and opening balance தினமும் பராமரிப்போம் என்றால் சரிதான். எங்கள் கடைக்கு வரும் மது பாட்டில்களுக்கு ஒவ்வொரு பாட்டிலுக்கும் தனித்தனியாக சீரியல்கள் இருக்கும். எங்கள் கடைக்கு வரும் பாட்டில் அனைத்திற்கும் உண்டான சீரியல்கள் ஆவணங்கள் பராமரிக்கப்படும். மேலும் விற்பனை செய்யப்படும் மது பாட்டில்களுக்கு சீரியல் நம்பர் பில்லில் போட்டு அளிக்கப்படும் என்றால் சரிதான். காணாமல் போனதாக சொல்லப்படும் 16 பாட்டில்களுக்கான சீரியல் எண் குறிப்பிட்டு புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான்.

2. எங்கள் கடையில் பணிபுரியும் நபர்களுக்கு வருகை பதிவேடு உண்டு என்றால் சரிதான். வருகை பதிவேட்டை நான் புகாருடன் இணைத்து போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எங்கள் கடைக்கு மொத்தம் எத்தனை சாவி உண்டு என்றால் இரண்டு சாவிகள் உண்டு, ஒன்று என்னிடம் இருக்கும், மற்றொன்று சேல்ஸ் மேனிடம் இருக்கும் என்றால் ஒப்படைக்கவில்லை. எங்கள் கடையில் இருந்த முறைகேட்டை மறைப்பதற்காக பொய்யான புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.11.27 18:30:57 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**